

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று , எழும்பூர் தாய் சேய் நல மருத்துவமனையில் உள்ள வசதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. , முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.லட்சுமி வேல்முருகன், தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.சுமதி, பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 4 –இல் புதியதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மாளிகை மற்றும் காய்கறி மார்க்கெட் கட்டுமானம், கடைகளின் அமைப்பு இதர வசதிகள் தொடர்பான குத்தகைதாரர் மற்றும் வியாபாரிகள் கருத்து கேட்புக் கூட்டம் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் கே. இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., ப.க.பழனிசாமி, பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டார்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# மீனவர்களையும் - படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, அக். 10-

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள், நேற்று (09.10.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்துத் தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (09.10.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**47 மீனவர்கள் சிறை பிடிப்பு!**

அக்கடிதத்தில், நேற்று (09.10.2025) அதிகாலை, ஐந்து இந்திய மீன்பிடிப் படகுகள் மற்றும் 47 மீனவர்கள் (30 தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் 17 காரைக்கால் மீனவர்கள்) இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறைபிடிக்கப்பட்டவர்களில் தமிழ்நாட்டின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 30 மீனவர்களும், நான்கு இயந்திரமயமாக்கப் பட்ட மீன்பிடிப் படகுகளும் அடங்கும் என்று கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கைது சம்பவம் மீனவ சமூகத்தினிடையே பெருத்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், கடலோர மாவட்ட மக்களிடையே அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025 ஆம் ஆண்டில், ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மீனவர்கள் கைது செய்யப்பட்ட முதல் நிகழ்வு இதுதான் என தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதுபோன்ற கைது சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவது, நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்களது பாரம்பரிய தொழிலைத் தொடர்வதில் உள்ள மன உறுதியையும், நம்பிக்கையையும் வெகுவாக பாதிப்பதாகவும் உள்ளது என வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 09.10.2025 நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 242 மீன்பிடிப் படகுகளும், 74 மீனவர்களும் இலங்கைக் காவலில் உள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**உடனடி நடவடிக்கை எடுத்திடுக!**

எனவே, நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு, சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய அதிகாரிகள் மூலம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதோடு, இது போன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக முயற்சிகளை மேற்கொள்ளவும், கூட்டுப் பணிக்குழுவை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரவும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் முதல்வர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்பட – தொலைக்காட்சி

# பயிற்சி நிறுவன வளாகத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளம்!

## திரைப்படத்துறையினர் - சின்னத்திரை - தனியார் நிறுவனங்கள் உரிய அனுமதி பெற்று பயன்பெறலாம்!

சென்னை, அக்.10-

தமிழ்நாடு அரசு எம்.ஜி. ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் உள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளம் திரைப்படத்துறையினர், சின்னத்திரை மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியோர் அரசு நிர்ணயித்த கட்டணத்தில் படப்பிடிப்பு நடத்த உரிய அனுமதி பெற்று பயன்பெறலாம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தரமணியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூ.5.09 கோடி செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தினை 25.08.2025 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி. ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் ஒப்பனை அறைகள், அலங்கார உடை அறை, உணவு அருந்தும் அறை ஆகியவை இணைந்த குளிர்சாதன வசதியுடன் கூடிய சுமார் 17,517 சதுர அடியில் அமைந்துள்ள இந்த படப்பிடிப்புத்தளம் திரைப்படத்துறையினருக்கு மிகுந்த பயனளிக்கும்.

மேலும், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் உள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புக்கான கட்டணங்களை கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது.

(ஒரு கால்ஷீட் = 12 மணி நேரம்) (1 Call Sheet = 12 Hours). படப்பிடிப்பு கட்டணம் 2025 மற்றும் ரூ.18% GST கட்டணம் (SGST 9% + CGST9%) விவரம்வருமாறு:-

1. படப்பிடிப்புத்தளம் (குளிர் சாதன வசதியுடன் ) Shooting floor (With AC) - ரூ. 60,000 - ரூ.10,800
2. படப்பிடிப்புத்தளம் (குளிர் சாதன வசதியில்லாமல் ) Shooting floor (Non AC) - ரூ. 40,000 - ரூ.- 7,200/-
3. செட் ஒர்க்ஸ் மற்றும் செட் ஒர்க்ஸ் பிரிப்பதற்கும் (குளிர்சாதன வசதி இல்லாமல்) (Set work/ Removal set works (Non Ac) - ரூ.35,000 - ரூ. -6,300.
4. ஒப்பனை அறை (குளிர்சா தன வசதியுடன் ) Makeup Room (With AC) - ரூ.7,000 - ரூ. -1,260.
5. ஒப்பனை அறை (குளிர்சா தன வசதி இல்லாமல் ) Makeup Room (Non AC) - ரூ. 4,000 - ரூ. -720.
6. சிறிய அறை (குளிர்சாதன வசதி இல்லாமல் ) Mini Hall (Non AC) - ரூ. 25,000-ரூ. 4,500.-
7. சிறு அறை நடைக்கூடம் வராண்டா (Mini Hall Corridor Veranda) - ரூ. 25,000 - ரூ. 4,500.
8. காத்திருப்புக் கட்டணம் நாள் ஒன்றுக்கு (Waiting Charges per day) - ரூ.30,000.-ரூ. 5,400.
9. துப்புரவுக் கட்டணம் (Cleaning charges) - ரூ.6,000-

மேற்படி படப்பிடிப்பு கட்டணங்களை வசூலிப்பது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:

- இவ்வளாகத்தில் நடைபெறும் படப்பிடிப்புக்கான அனுமதி, இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை தலைமைச்செயலகம், சென்னை -9 அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும்.
- தமிழ்நாடு அரசு எம். ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113 படப்பிடிப்பு கட்டணங்களை முதல்வர் (மு.கூ.பொ) அவர்கள் வசூலிப்பார்.
- குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்திற்கான முன்வைப்புத் தொகை ரூ.20,000/- வசூலிக்கப்படும். படப்பிடிப்பு முடிந்த பின், விதிமுறைகளுக்கு உட்பட்டு முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்.
- அட்டவணையின்படி, ஒவ்வொரு கால்ஷீட்டுக்கும் 12 மணி நேரம் எனப் படப்பிடிப்புக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தில் படப்பிடிப்பு நடத்த விரும்பும் திரைப்படத் துறையினர், சின்னத்திரை மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியோர் இயக்குநர் ,செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களிடம் முன்அனுமதி பெற்று, அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்தி, உரிய அனுமதியுடன் இவ்வசதிகளைப் பயன்படுத்தலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் உள்ள காந்தி சாலை, சேவா நகர் சமூகநலக்கூடத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பொதுமக்களின் பல்வேறு அரசு துறை சார்ந்த கோரிக்கை மனுக்களை ஏற்கப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டது. பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி, மதிய உணவு உள்ளிட்டவைகளை வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் செய்து கொடுத்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வே.ஆனந்தம், மண்டலகுழு தலைவர் இரா.துரைராஜ், வட்ட செயலாளர்கள் ஜி.பி.எஸ்.பாலசதீஷ், பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை

# தாய் சேய் நல மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் புதிய கட்டிடங்கள் - மருத்துவ வசதிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, அக்.10–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.10.2025) சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் தாய் சேய் நல மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் புதிய மருத்துவக் கட்டிடங்கள், மருத்துவ வசதிகளை ஆய்வு மேற்கொண்டு, நிர்வாக சீர்திருத்தத்திற்கு புதிய உத்தரவுகளை பிறப்பித்தார்.

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் மருத்துவக் கட்டிடங்களையும், ஏற்கெனவே இருக்கின்ற சிறிய குறைபாடுகளையும் கண்டறிவதற்கு ஆய்வுகள் மேற்கொண்டோம். அந்தவகையில் இந்த மருத்துவமனை என்பது கட்டி முடிக்கப்பட்டு ஏறத்தாழ 60 ஆண்டுகள் நிறைவு செய்திருக்கிறது. 60 ஆண்டுகளுக்கு முன்னாள் இம்மருத்துவமனையின் பயன்பாடு என்பது இந்த அளவிற்கு இல்லை. இம்மருத்துவமனைக்கு தினந்தோறும் புறநோயாளிகள் 1,500 பேர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கும், தாய் சேய் நல மருத்துவமனைக்கு 1,200 பேரும், சுமார் 3000 பேர் வரை ஒவ்வொரு நாளும் இம்மருத்துவமனைக்கு புறநோயாளிகளாக வருகை புரிகின்றனர். இம்மருத்துவமனையில் உள்நோயாளிகளைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமாக 2000 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இது இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் 5000த்திற்கும் மேற்பட்டவர்கள் மருத்துவ பயன் பெற்று வருகிறார்கள். 60 ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டிடம் என்பதால் குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி போன்றவை கேள்விக்குறியாக இருந்தது. இதற்கு முன்பு இம்மருத்துவமனையில் குடிநீர் தேவை என்பது லாரிகள் மூலமாக பெறப்பட்டு வந்தது. மருத்துவத்துறையின் செயலாளர் மெட்ரோ நிர்வாகத்துடன் கூட்டம் நடத்தி சென்னையில் இருக்கின்ற அனைத்து மருத்துவமனைகளுக்கு குடிநீர் வசதி மற்றும் பொதுப்பணித்துறையினரிடம் ஒரு கூட்டம் நடத்தி பாதாள சாக்கடை குழாயினை மாற்றி அமைத்திட அவசியம் குறித்தும் விவாதித்திருக்கிறார்கள். அந்தவகையில் இன்று குழந்தைகள் நல மருத்துவமனையைப் பொறுத்தவரை 65 ஆண்டுகளுக்கு முன்னாள் போடப்பட்ட பிரதான கழிவு நீர் குழாயினை பொறுத்தவரை அதன் அளவை மாற்றி புதிய குழாய்கள் அமைக்கப்படவிருக்கிறது. உடனடியாக நாளையே பொதுப்பணித்துறையின் சார்பில் இக்குழாய்கள் மாற்றி அமைக்கும் பணி தொடங்கப்படவிருக்கிறது. 4 வாரங்களுக்குள் ஒட்டுமொத்தமாக பிரதான கழிவுநீர் குழாய்கள் மாற்றியமைக்கப்படவிருக்கிறது.

**புதிய மருத்துவக் கட்டிடங்கள்**

தமிழ்நாடு முதலமைச்சர் இம்மருத்துவமனையின் கட்டமைப்புகளை மாற்றி அமைத்திடும் வகையில் ரூ.53 கோடி மதிப்பீட்டில் 6 தளங்களுடன் கொண்ட 92,000 சதுர அடி பரப்பில் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்தார்கள். இக்கட்டிடம் கட்டும் பணி தற்போது முடிவடையும் நிலையில் இருக்கின்றது. வரும் டிசம்பர் இறுதியில் இக்கட்டிடப் பணிகள் முழுமையுற்று ஏற்கெனவே இம்மருத்துவமனையில் புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்ற குழந்தைகள் குறிப்பாக எலும்பு மஜ்சை மாற்று அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு சிகிச்சை பிரிவுகள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. இந்த புதிய கட்டிடத்தில் பிரத்யேகமாக புற்றுநோய் பாதிப்புகளுக்குள்ளான பாதிப்புகளுக்கு இந்த இடம் ஒதுக்கப்படவிருக்கிறது மற்றும் பல்வேறு சேவைகளுக்கு இக்கட்டிடம் பயன்படுத்தப்படவிருக்கிறது. எனவே இந்த மருத்துவக் கட்டிடத்திலிருந்து வருகின்ற கழிவு நீரை பாந்தியன் சாலைக்கு ஒரு புதிய கழிவு நீர் இணைப்பு ஏற்படுத்துவது என்பது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியும் விரைந்து வேகமாக செயல்படுத்தப்படவிருக்கிறது. எனவே இந்த மருத்துவமனைகளிலிருந்து ஏற்கெனவே இருக்கின்ற பழைய கழிவுநீர் குழாய்களை தமிழ் சாலைக்கும், புதிய கட்டிடத்திலிருந்து ஒரு இணைப்பு பாந்தியன் சாலைக்கும் கழிவு நீர் இணைப்பு புதிதாக அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு பணிகளும் நான்கு வாரத்திற்குள் முடிவடையும். புதிய கட்டிடம் வருகின்ற டிசம்பர் இறுதியில் திறந்து வைக்கப்படும்.

**கலைஞர் மாரத்தான் நிதி மூலம் மருத்துவமனையில் கட்டிடம்**

குடிநீரைப் பொறுத்தவரை இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளினால் தற்போது 30% அளவிற்கு குடிநீர் லாரிகள் மூலமாக குறைக்கப்பட்டு பிரதான குடிநீர் குழாய்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இன்னமும் கொஞ்சம் கூடுதல் அழுத்தம் தந்து ஒட்டுமொத்தமாக அனைத்து வார்டுகளுக்கும் பிரதான குழாய்கள் மூலமாகவே குடிநீர் தரும் பணி என்பது திட்டமிட்டு பணிகள் நடைபெற தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டு அதில் கிடைத்த பதிவுத்தொகை ரூ.1.22 கோடி நிதி அரசாங்கத்திற்கு தந்து அரசாங்கத்தின் சார்பில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.2.28 கோடி நிதி, National Urban Livelihood Mission (NULM) திட்டத்தின்மூலம் ரூ.2.39 கோடி ஆக மொத்தம் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் 14,262 சதுர அடி பரப்பில் 4 தளங்களுடன் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அந்தக் கட்டிடத்தை பொறுத்தவரை இந்த மருத்துவமனைகளுக்கு வருகின்ற பயனாளிகள் குழந்தைகளை இம்மருத்துவமனையில் சேர்த்துவிட்டு தங்குவதற்கு இடமில்லாமல் சாலைகளில் ஓரங்களில் படுத்து உறங்கும் நிலை இருந்து வருகிறது. அந்தவகையில் அவர்களுக்கென்று 100 படுக்கைகள் கொண்ட ஓய்வறை கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் தங்கும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு 3 வேளை இலவசமாக உணவு கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் அமைப்பு சிஎஸ்ஆர் நிதி பங்களிப்புடன் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அந்தவகையில் அந்தக் கட்டிடமும் நவம்பர் இறுதிக்குள் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

**குழந்தைகள் நல மருத்துவமனையின் வசதிகள்**

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் இம்மருத்துவமனையில் கோபால்ட் கருவி அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.2.24 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே அமைக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றதற்கு பிறகு இந்த மருத்துவமனைகளில் குறிப்பாக அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் அல்ட்ராசவுண்ட் லேப் ரேஸ்கோபி, அதேபோல் ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் மரபியல் சார்ந்த நோய்கள் மற்றும் மரபணு சார்ந்த நோய்கள் பிற அரிய வகை நோய்களுக்கான ஒப்புயர்வு மையம், சிறப்பு பச்சிளங்குழந்தை பராமரிப்பு பிரிவுக்கு (High frequency Oscillatory Ventilator, ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் பிரத்யேக இரத்தம் மற்றும் எலும்பு மஜ்சை மாற்று சிகிச்சை மையம் என்று பல வசதிகள் இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**தாய் சேய் நல மருத்துவமனையின் வசதிகள்**

அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் ரூ.1 கோடி செலவில் தாய் சேய் இணை சிகிச்சை பிரிவு, கர்ப்பிணி பெண்களுக்கான சிகிச்சை பிரிவு மற்றும் கலையரங்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்தி வசதிகளும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்புகளும் இங்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் புதிய செயற்கை கருத்தரித்தல் மையம் இங்கு தொடங்கப்பட்டது. செயற்கை கருத்தரித்தல் மையங்களைப் பொறுத்தவரை தனியார் மருத்துவமனைகளில் ரூ.12 இலட்சம் வரை செலவு ஆகும். ஆனால் இம்மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் இலவசமாக செயற்கை கருத்தரித்தல் செய்திட வேண்டும் என்கின்ற வகையில் இந்தியாவிலேயே முதன் முறையாக இம்மருத்துவமனையில் இம்மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**பத்திரிக்கை செய்தி**

கடந்த ஓரிரு மாதங்களில் இம்மருத்துவமனை குறித்து பத்திரிக்கைகளில் வந்த செய்திகள், இம்மருத்துவமனையில் லிப்ட் பழுதாகி இருக்கின்றது, அதனால் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்கின்ற ஒரு செய்தி மற்றொன்று உடனடியாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தாய் சேய் நல மருத்துவமனையில் இருக்கின்ற 4 லிப்ட்களும் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொன்றாக பழுது பார்க்கும் பணிகள் முடிவுற்று நவம்பர் இறுதிக்குள் 4 லிப்ட்களும் முழுமையாக பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. இப்படி பல்வேறு வசதிகள் செய்து வரும் சூழலில் நேற்று ஒரு தினசரி நாளிதழில் அரசு மருத்துவமனைகளில் இலஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்கின்ற ஒரு செய்தி, அனைத்து இடங்களிலும் அதுபோல் இல்லை, ஒருசில இடங்களில் சிறிய அளவிலான தவறுகள் நடந்திருக்கும். அதனைப் பெரிதுப்படுத்தி ஒட்டுமொத்தமாகவே மருத்துவமனைகளில் மருத்துவ சேவையே சரியில்லை என்கின்ற செய்தி வெளியிடும் சூழல் இருந்து வருகிறது. அரசு மருத்துவ சேவையை எந்த அளவிற்கு மக்கள் பயன்படுத்த தொடங்கியிருக்கிறார்கள் என்பதை கடந்த 4.5 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியினைப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். எனவே ஊடகங்களோ, பத்திரிக்கைகளோ தவறான செய்தியினை பரப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். குறைகள் இருந்தாலும், விமர்சனம் இருந்தாலும் சொல்லுங்கள், சரி செய்கிறோம். அதேபோல் இன்னொரு மாறுதலும் இம்மருத்துவமனையில் செய்ய இருக்கிறோம். தாய் சேய் நல மருத்துவமனையிலும், குழந்தைகள் நல மருத்துவமனையிலும் ஒவ்வொரு மருத்துவமனையிலும் தலா 50 என்கின்ற வகையில் விளம்பர பலகைகளை அமைக்க இருக்கிறோம். இந்த விளம்பர பலகைகளில் அந்த மருத்துவமனையின் பொறுத்தமான 2 நபர்களுடைய தொலைபேசி எண் எழுதி, யாரும் யாருக்கும் பணம் தர வேண்டாம், இது முழுக்க முழுக்க இலவசமான மருத்துவ சேவை, இதில் யாரும் இலஞ்சம் வாங்கினால் சட்டப்படி தண்டிக்கப்படுவீர்கள் என்கின்ற வகையில் விளம்பரங்கள் எழுதி 100 விளம்பர பலகைகள் அமைக்க இருக்கிறோம். அதற்கான மாதிரியை சம்மந்தப்பட்ட இரண்டு மருத்துவமனைகளின் இயக்குநர்கள் சம்மந்தப்பட்ட செயலாளரிடம் காண்பித்து இந்த வாசகத்திற்குள் அமைக்க இருக்கிறார்கள். எனவே பொதுமக்கள் இம்மருத்துவனைக்கு வருபவர்களும் கையூட்டை சட்டப்பூர்வமாக மாற்ற வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

**இருமல் மருந்து தொடர்பான கேள்விக்கு**

அக்டோபர் 1ந்தேதி இச்சம்பவம் நடைபெற்றது. மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் இருந்து தகவல் வந்தது, தகவல் வந்தவுடன் மருத்துவத் துறையின் செயலாளர் சம்மந்தப்பட்ட அலுவலர்களை அனுப்பி பரிசோதனை செய்து அம்மருந்தினை ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்தவுடன் அதில் கலப்படம் இருப்பது என்பது கண்டறியப்பட்டு, மருந்து பயன்படுத்தக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டது. தடைவிதித்தது மட்டுமல்ல மத்தியப் பிரதேசத்திற்கு மருந்தில் கலப்படம் உள்ளது என்ற தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. ஒன்றிய அரசிற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய பிரதேச அரசும், ஒன்றிய அரசும் இந்த மருந்தினை ஆய்வு செய்து மருந்தின் மீது தவறில்லை என்று இறப்புகளுக்கு பிறகும் அறிவிக்கிறார்கள். நமது மாநிலத்தில் மருந்து விற்க கூடாது என்று அறிவிக்கிறோம், அதன்பிறகு இது சரி என்று அறிவிக்கிறார்கள். அதன்பிறகு ஒடிசா, புதுவை ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் தகவல் அனுப்பிகிறோம். இந்த மருந்து வாங்க வேண்டாம், இதுமாதிரியான பாதிப்புகள் இருப்பது சொல்கிறோம், வாங்கவில்லை. தற்போது யார் மீது குறை சொல்வது என்பது இப்போது விவாதமில்லை. எந்த மருந்தாக இருந்தாலும் அந்தந்த மாநிலத்தின் மருந்து கட்டுப்பாட்டுத் துறை ஆய்வு செய்ய வேண்டும். இங்கு ஆய்வு செய்து அந்த மருந்தில் கலப்பு இருக்கிறது என்று சொல்கிறோம். ஒன்றிய அரசும், மத்தியபிரதேச அரசும் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் அந்த மருந்து கம்பெனியை மூடி சீல் வைக்கப்பட்டிருக்கிறது. தயாரிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது. 03 ந்தேதி அவர்களுக்கு நோட்டீஸ் வழங்கி நிரந்தரமாக உங்களுடைய லைசென்ஸ் ஏன் நிறுத்தக்கூடாது, உங்களுடைய கம்பெனி ஏன் நிறுத்தக்கூடாது என்று சொல்லியிருந்தோம், மருந்து கம்பெனி உரிமையாளர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். இதில் இன்னொரு கூடுதல் நடவடிக்கையாக சீனியர் மருந்துக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் நேரிடையாக சென்று முறையாக ஆய்வு செய்யவில்லை என்பதற்காக 2 பேரை சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். தமிழ்நாடு அரசு தவறு என்று தெரிந்தபிறகு உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம், சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.லட்சுமி வேல்முருகன், அரசு தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.சுமதி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 8 வது மண்டலம், 101 வது வார்டில் தமிழ்நாடு அரசின் ”உங்களுடன் ஸ்டாலின்சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கார்த்திக் மோகன், மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி., வட்டச் செயலாளர்கள் க.கோவிந்தராஜ், சி.பி.திருமலை மற்றும் டி. சமந்தா, கே.பி.சுரேந்தர் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், (101), 101 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.